# T மூன்றாம் பருவ பொது தொகுத்தறித் தேர்வு - 2025

## ஏழாம் வகுப்பு

நேரம்: 2.00 மணி அறிவியல் மதிப்பெண்கள்: 60

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **10×1=10**

1) _______ பரப்பு ஒளியை நன்கு எதிரொளிக்கிறது

அ) நீர் ஆ) குறுந்தகடு இ) கண்ணாடி ஈ) கல்

2) ஒளி என்பது ஒரு வகை _______

அ) பொருள் ஆ) ஆற்றல் இ) ஊடகம் ஈ) துகள்

3) அநேக இளம் விண்மீன்களைக் கொண்ட விண்மீன் திரளுக்கு _______ என்று பெயர்

அ) நீள் வடிவ விண்மீன்திரள் ஆ) ஒழுங்கற்ற விண்மீன்திரள்

இ) குழுக்கள் ஈ) சுருள் விண்மீன்திரள்

4) மனிதனால் உருவாக்கப்பட்ட முதல் இழை _______ ஆகும்

அ) நைலான் ஆ) பாலியெஸ்டர் இ) ரேயான் ஈ) பஞ்சு

5) PET என்பது _______ ன் சுருக்கெழுத்தாகும்

அ) பாலியெஸ்டர் ஆ) பாலியெஸ்டர் மற்றும் டெரிலின்

இ) பாலிஎத்திலின் டெரிப்தாலேட் ஈ) பாலிதீன் டெரிலின்

6) ஆஸ்பிரின் ஒரு _______

அ) ஆன்டிபயாடிக் ஆ) ஆன்டிபைரடிக் இ) மயக்க மருந்து ஈ) சைக்கீடெலிக்

7) முட்டையில் _______ அதிகம் உள்ளது.

அ) புரதம் ஆ) கார்போஹைட்ரேட் இ) கொழுப்பு ஈ) அமிலம்

8) பிரித்தெடுப்பவரின் நோய் என்றழைக்கப்படுவது _______

அ) ஆஸ்துமா ஆ) ஆந்த்ராக்ஸ் இ) டைபாய்டு ஈ) காலரா

9) பட்டு உற்பத்தியில் உலகிலேயே _______ இடத்தைப் பெறுவது நம் இந்திய நாடு

அ) ஏழாவது ஆ) இரண்டாவது இ) மூன்றாவது ஈ) ஐந்தாவது

10) ஆவணத்தைச் சேமிக்க _______ மெனு பயன்படுகிறது

அ) file→open ஆ) file→print இ) file→save ஈ) file→close

**II. பொருத்துக.** **5×1=5**

| | | |
|---|---|---|
| 11) பிராய்லர் | - | ஆந்திரப்பிரதேசம் |
| 12) மின்மினிப்பூச்சி | - | பட்டுப்பூச்சி |
| 13) நிலா | - | கோழிப்பண்ணை |
| 14) கூட்டுப்புழு | - | ஒளிரும்பொருள் |
| 15) அமைதிப்பட்டு | - | ஒளிராப்பொருள் |

**III. கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5×1=5**

16) ஒரு சமதள ஆடியானது உருவாக்கும் பிம்பம் _______ ஆகும்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



17) இயற்கை இழைகளிலேயே வலிமையான இழை _______

18) உலக ORS தினம் _______

19) பல்வகை நெகிழிகளை இனம் காண _______ பயன்படுகின்றன.

20) இந்தியா ஏவிய முதல் செயற்கைக் கோள் _______ ஆகும்.

**IV.** சுருக்கமான விடையளி. (ஏதேனும் 10):- **10×2=20**

21) செரிகல்ச்சர் - வரையறு

22) கத்திரித்தல் என்றால் என்ன?

23) "மட்கும் தன்மை வாய்ந்தவை" என்பதன் பொருள் என்ன?

24) பாலிலிருந்து கிடைக்கும் பொருள்கள் எவையேனும் நான்கினை எழுதுக.

25) எரிதல் வெப்பநிலை என்றால் என்ன?

26) 5R கொள்கை என்பது என்ன?

27) வெப்பத்தால் இறுகும் நெகிழிப் பொருள்களுக்கு 2 எடுத்துக்காட்டுகள் தருக.

28) சரியா? தவறா? என எழுதுக. தவறெனில் சரியான கூற்றை எழுதுக.

அ) அஹிம்சைப் பட்டின் மறுபெயர் மல்பெரிபட்டு

ஆ) மரம் மற்றும் நிலக்கரியை எரிப்பதால் காற்று மாசுபடுகிறது.

29) ஒளியின் நிறமாலையை எவ்வாறு பெறலாம்?

30) ஒப்புமை தருக:

அ) சுடரின் உள்மண்டலம் : கருமை நிறம் :: சுடரின் வெளிமண்டலம் : __________

ஆ) பருத்தி : இயற்கை இழை :: பாலியெஸ்டர் : __________

31) கண்ணுறு ஒளி என்றால் என்ன?

32) பட்டின் ஏதேனும் இரண்டு பயன்பாட்டை எழுதுக.

**V.** பின்வரும் வினாக்களில் ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விரிவான விடை தருக:- **4×5=20**

33) எதிரொளித்தல் என்றால் என்ன? எதிரொளிப்பு விதிகளை படம் வரைந்து விவரிக்க

34) கிருமிநாசினிகள் ஆன்டிசெப்டிக்கிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை எடுத்துக்காட்டுடன் விளக்குக

35) மெழுகுவர்த்தியின் படம் வரைந்து பாகங்களைக் குறிக்கவும். எரிதல் வகைகளையும் விளக்குக

36) நெகிழி பொருள்களை அகற்றும் பாதுகாப்பான முறைகள் பற்றி எழுதி ஏதேனும் 2 முறைகளை விளக்குக

37) பட்டாலைகளில் ஏற்படும் அபாயங்கள் யாவை?

38) நிழலின் பண்புகள் ஏதேனும் ஐந்தினை எழுதுக?

********

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com